# உற்றுநோக்கி செயற்படுதல்

Erzbachtal பாடசாலையின் ஆரோக்கியமான பிள்ளைகளுக்கு

**பெற்றோருக்கான தகவல்கள்**

அன்பான பெற்றோருக்கு

உங்கள் பிள்ளையின் ஆரோக்கியமான வளர்ச்சியை இயலுமானவரை ஊக்கு-வித்து, சட்டதிட்டதிற்குட்பட்ட விடயங்களில் தாமே பொறுப்பெடுக்க* வைப்பதே Erzbachtal பாடசாலையின் விருப்பமாகும். ஏதாவது தடைகள், கஸ்டங்கள் தென்படின் நாமே அதற்குரிய காரணங்களைத் தேடி அறிந்து அதை நிவிர்த்தி செய்ய உதவுவோம்.

அதற்காக „உற்றுநோக்கி செயற்படுதல்" என்ற திட்டத்தை நடைமுறைப் படுத்துகிறோம். இந்த திட்டத்தின் வழிகாட்டல் படி பாடசாலையில் எல்லா வயதுப் பிரிவினருக்கும் நடைமுறைப் படுத்தப்படும். இதன்மூலம் ஆசிரியர்கள் ஆரம்ப கட்டத்திலேயே பிரச்சினைகளின் அறிகுறிகளைக் கண்டறிந்து சரியாக முடிவுசெய்து அதற்கேற்ற நடவடிக்கைகளை முன்னேடுப்பர். பிரச்சினைகளின் வீரியத்திற்கேற்ப பேச்சுவார்த்தையுடன் முடியலாம் அல்லது இதற்கென பிரத்தியேகமான நிறுவனத்தின் மூலமோ அல்லது நன்னடத்தைக்கோ வழி செய்யலாம். இங்கு அடிப்படையாக: **நாம் பிரச்சினைகளை உற்றுநோக்கி அதை தீர்ப்பதற்காக செயற்படுவோம்.**

ஆரம்பம் தொடக்கமே பிள்ளையும் பெற்றோராகிய நீங்களும் சேர்ந்து தீர்வுசெயன் முறைக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று விரும்புகிறோம். பெற்றோராகிய உங்கள் தேவைக்கேற்ப நீங்களே பேச்சுவார்த்தைக்கு அழைக்கலாம். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்கள் பிரச்சினைகளை வெளிபடையாகப் பேசி, உங்கள் பக்க நியாயங்களை எடுத்துரைத்து, தேவைப்படின் எமது உதவிகளையும் பெற்றுகொள்ளலாம். ஆசிரியர்களும் மற்றும் இதனுடன் சம்பந்தப்படும் பயிற்றுவிக்கப்பட்ட நபர்களும் உங்கள் விடயங்களை இரகசியமாகப் பாதுகாப்பார்கள். பிள்ளையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு முக்கியமான தகவல்கள் தேவைப்படின் உங்களின் அனுமதியுடன் மட்டுமே மேற்கோண்டு தேவையானவர்களுக்கு சொல்லுவார்கள்.

பெற்றோராகிய உங்களுடன் சேர்ந்து செயற்படுவதற்கு சந்தோசப்படுகிறோம். ஏதாவது கேள்விகள் இருப்பின் நம்பிக்கையுடன் உங்கள் பிள்ளையின் ஆசிரியரை அல்லது பாடசாலை சமூகஉத்தியோகத்தரை நாடுங்களை. அவர்கள் உங்களுக்கு ஆலோசனை தரக் காத்திருக்கிறார்கள்.

Erzbachtal பாடசாலை அதிபர்

*சுவிஸ் சட்டப்புத்தகத்தின் பிள்ளைகள் பாதுகாப்பு பற்றிய பகுதி UNOவின் பிள்ளைகள் பாதுகாப்பு சட்டத்துக்குள் அடங்கும். இந்தச் சட்டம் ஏப்பிரல் 2010இல் 193 நாடுகளால் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதன்படி எங்கள் பிள்ளைகள் உடலாலும் உள்ளத்தாலும் வசதியை அடைய உரிமை உடையவர்கள். இதன்படி தம் பிள்ளைகளை தங்கள் வசதிக்கேற்ப உடலாலும், உள்ளத்தாலும் கலாச்சார நடவடிக்கைகளிலும் ஊக்குவித்தும் பாதுகாத்தும் வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும் (ZGB, Art. 302 Abs.1). ஒரு பிள்ளை ஆபத்தில் இருப்பதாக அறிந்தால் அதைக் கையாளுவது பாடசாலையின் கடமையாகும் (ZGB EG Artikel 55 Abs. 2). www.unicef.de/information/kinderrechte